THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP.No.43/2021

Deposition of RW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 07.12.2023.

Evidence Recorded Time: 12.06 P.M to 12.10 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கவிதா | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | கல்யாணகுமார் | **Calling** | : | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை –1, ஓமலூர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:–**

நான் ஓமலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை –1 ஆக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். விபத்தில் சமந்தப்பட்ட TN 43 A 0587 டிப்பர் லாரி மற்றும் TN 93 D 4017 TVS XL ஆகிய இரு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகளை இத்துடன் தாக்கல் செய்கிறேன். அவை முறை சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆகும். மேற்படி டிப்பர் லாரியை ஓட்டிய மணி என்ற ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் LMV ஓட்டுநர் உரிமம் மட்டும் உள்ளது. மேற்படி ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் Transport License மற்றும் ஓட்டுநர் உரிமம் இல்லை. மேற்படி ஓட்டுநர் உரிமத்திற்கான Extract சா.சா.ஆ.3 ஆகும். மேற்படி டி.வி.எஸ் எக்எஸ்.எல் அஷ்ரப் அலி விபத்து சமயத்தில் அவருடைய ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஓட்டுநருக்கு 02.07.1999 முதல் 01.07.2019 வரை மட்டுமே ஓட்டுநர் உரிமம் உள்ளது அது சா.சா.ஆ.4 ஆகும். விபத்து சமயத்தில் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை.

**குறுக்கு விசாரணை:–** வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் சிறிது நேரம் ஒத்திவைக்கப்படுகிறது.

Evidence Recorded Time: 12.36 P.M to 12.45 P.M

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் எந்த தேதியில் ஓமலூர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 08.07.2022 முதல் பணிபுரிந்து வருகிறேன். சா.சா.ஆ.4 ஆவணம் எந்த அலுவலகத்தில் வழங்கப்பட்டது சேலத்தில் உள்ள எங்கள் அலுவலகத்தால் 02.07.1997 ல் வழங்கப்பட்டது. யார் பெயருக்கு வழங்கப்பட்டது என்றால் அஷ்ரப் அலி த/பெ.ஷாகுல் ஹமீது என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. சா.சா.ஆ.2 மற்றும் சா.சா.ஆ.3 ஆவணங்கள் யாரால் வழஙகப்பட்டது என்றால் ஓமலூர் பகுதி அலுவலகத்தால் வழங்கப்பட்டது. சா.சா.ஆ.1, சா.சா.ஆ.2 ஆகிய இரண்டு ஆவணங்களிலும் ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ல் கண்ட வாகனத்திற்கு Fitness 03.02.2036 வரை உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனம் இஸ்கோ டோக்கியா நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அந்த காப்பீடு 21.02.2022 வரை நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.1 கண்ட டிப்பர் லாரிக்கு Fitness 11.02.2023 வரை உள்ளது என்றால் சரிதான். அதற்கு Permit validity 23.03.2022 வரை உள்ளது என்றால் சரிதான். டிப்பர் லாரி ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனம் சேலம் கிளையில் காப்பீடு செய்யப்பட்டு அந்த காப்பீடு 24.07.2021 வரை நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான். பொதுவாக வாகன ஓட்டிகள் முறையாக ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருந்தால் அவருடைய ஓட்டுநர் உரிமத்தில் விபத்து பற்றி குறிப்புகள் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். சா.சா.ஆ.3 ல் அவ்வாறு எந்த குறிப்புகள் குறிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சா.சா.ஆ-3 எந்த தேதியில் எடுக்கப்பட்டுது என்றால் 11.10.2023-ல் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை -</u>** இல்லை.

ஒம்/-RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.